**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்**

**முன்னிலை – திரு.சு.அருண்சங்கர், பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC),**
**முதுகுளத்தூர்.**

**திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது ஆண்டு, கார்த்திகை திங்கள் 18 ஆம் நாள்**
**2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**அசல் வழக்கு எண்.14/2020**
**CNR.NO.TNRM09-000016-2020**

சபீனாபேகம்

... வாதி

/ எதிர் /

1.குமரவேலு
2.வள்ளி
3.பாலா (எ) பாலசுப்பரமணியன்
4.ராஜேஸ் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 21-11-2024 அன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு வரப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இராஜசேகர், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜரின்மையால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பில் எழுத்துபூர்வமான வாதுரை தாக்கல் செய்யாதபோதும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த நிலையில் இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

தாவாச்சொத்து வாதிக்கு பாத்தியமானதென்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவாச் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து

வருவதை பிரதிவாதிகளோ அவரது வகையறாக்களோ, ஏஜென்டுகளோ தடையிடர் எதும் செய்யாமலும், வன்முறையில் ஆக்கிரமிக்காமலும் இருக்க தக்கதாய் பிரதிவாதிகளை தடை செய்து பிரதிவாதிகள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், இவ்வழக்கின் செலவை வாதிக்கு, பிரதிவாதிகளை செலுத்த கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)வழக்குரையின் சுருக்கம்:**

i) தாவாச்சொத்தான காலிமனையிடம் (காக்கூர் கிராம நத்தம் சர்வே எண் 57/14) ஆதியில் காக்கூர் கிராமத்தில் வசித்து வந்த வாணித்துரை மகன் முருகவேலுக்கு தந்தை வழியில் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தாகும். பின்னர் மேற்படி சொத்தை வாதியின் தாயார் ஸாரா பீவி கடந்த 23.02.1999 ம் தேதி தகுந்த பிரதிபிரயோஜத்திற்கு கிரைய ஆவண எண் 108/1999 ன் மூலம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்து மேற்படி காலி மனையிடத்தை தனது மகளான வாதிக்கு பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மென்ட் மூலம் கடந்த 30.03.2012 ம் தேதி பாத்தியப்படுத்தி தாவாச்சொத்தையும் ஒப்படைத்துவிட்டார்.

(ii)இனாம் செட்டில்மென்ட் ஆவணமானது முதுகுளத்தூர் சார் பதிவக ஆவண எண் 401/2012 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. தாவாச்சொத்தின் பட்டா வாதியின் தாயார் பெயரில் இருந்து வருகிறது. இனாம் பெற்ற காலம் முதல் வாதி தாவாச்சொத்தை காலிமனையாக வைத்து அனுபவம் செய்து வருகிறார். தாவாச்சொத்திற்கும் கிழக்கே பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது. தாவாச்சொத்தில் பிரதிவாதிகளுக்கு எந்த ஒரு பாத்தியமோ அனுபவமோ அறவே கிடையாது.

(iii)இந்நிலையில் தாவாச்சொத்தில் எந்த ஒரு பாத்தியமோ அனுபவமோ அறவே இல்லாத பிரதிவாதிகள் கடந்த 15.11.2019 ம் தேதி தாவாச்சொத்தை அத்துமீறி வன்முறையில் ஆக்கிரமிக்க எத்தனித்துள்ளார்கள். வாதி அதனை தடுத்துவிட்டார். தாவாச்சொத்தில் எந்த ஒரு பாத்தியமோ, அனுபவமோ இல்லாத பிரதிவாதிகளின் அக்கிரம செயல் குறித்து வாதி கிராம பெரியோர்களிடம் முறையிட்டதில் இனிமேல் தாவாச்சொத்தில் எந்த பிரச்சனையும் செய்யமாட்டோம் என உறுதியளித்த பிரதிவாதிகள் இதற்கு பிறகு தாவாச்சொத்தை வன்முறையில் ஆக்கிரமிக்க போவதாகவும், அதன் மூலம் வாதியின் அனுபவத்தை தடை செய்ய போவதாகவும் வீண் பிரஸ்தாபம் செய்துகொண்டு கலகாஸ்பதமாக இருந்து வருகிறார்கள்.

(iv) பிரதிவாதிகள் ஆள் சேர்க்கையும், அரசியல் செல்வாக்கும், பணபலமும் மிக்கவர்கள், எனவே தாவாச் சொத்து வாதிக்கு பாத்தியமானதென்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அவரது வகையறாக்களோ, ஏஜென்டுகளோ தடையிடர் எதும் செய்யாமலும், வன்முறையில் ஆக்கிரமிக்காமலும் இருக்க தக்கதாய் பிரதிவாதிகளை தடை செய்து பிரதிவாதிகள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜரின்மையாலும் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

**4)** இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சணை யாதெனில் இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதா ? என்பதே ஆகும்.

**5)** இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி சபீனாபேகம் தன்னை வா.சா.1 ஆக விசாரித்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன மற்றும் ராஜாஉசேன் வா.சா.2 ஆகவும் விசாரித்து சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6)** வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1, 22.09.1999 ம் தேதி வாதியின் தாயார் சாராபீவி, முருகவேலிடம் தாவா சொத்தை கிரையம் பெற்ற கிரையப்பத்திர அசல், வா.சா.ஆ.2, 22.11.1999 ம் தேதி வாதியின் தாயார் சாராபீவி பெயரில் ஏற்பட்ட பட்டாமாறுதல் உத்தரவு அசல், வா.சா.ஆ.3, 30.03.2012 ம் தேதியில் தாயார் சாராபீவி சபீனாபேகத்திற்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணம், வா.சா.ஆ.4, தாவா சொத்திற்குரிய வில்லங்கச் சான்றிதழ் அசல், சா.சா.ஆ.1, ராஜாஉசேன் பெயரில் உள்ள பட்டா எண்.439 பட்டா அசல் சா.சா.ஆ.2, ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

**6)** தாவாச் சொத்து வாதிக்கு பாத்தியம் என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவாச் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவரது வகையறாக்களோ, ஏஜென்டுகளோ தடையிடர் ஏதும் செய்யாமலும், வன்முறையில் ஆக்கிரமிக்காமலும் இருக்கத்தக்கதாய் பிரதிவாதிகளை தடை செய்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**11)** தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு உண்மையிலேயே பாத்திய அனுபவம் இருந்திருந்தால் இவ்வழக்கில் ஆட்சேபனை தெரிவித்து வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்களை மறுத்தும் வாதி கோரியுள்ள சங்கதிகள் பொய் என்று நிரூபிக்கவும் தனது தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்களை

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியிருப்பார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் தாவா சொத்து வாதிக்கு பாத்தியம் என்பது குறித்து தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையிலும், பிரதிவாதிகள் தங்கள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தாததாலும், இவ்வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரத்தை அவருக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு ஏற்றதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே இவ்வழக்கிற்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இந்த வழக்கு அனுமதிக்கப்படுகிறது. தாவா சொத்து வாதிக்கு பாத்தியம் என்று விளம்புகை செய்தும், அதனை தொடர்ந்து தாவாச் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவரது வகையறாக்களோ, ஏஜென்டுகளோ தடையிடர் ஏதும் செய்யாமலும், வன்முறையில் ஆக்கிரமிக்காமலும் இருக்கத்தக்கதாய் பிரதிவாதிகளை தடை செய்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ARUNSANKAR S

Digitally signed by ARUNSANKAR S
Date: 2024.12.03 18:48:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
முதுகுளத்தூர்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:–</u>**

வா.சா.1 – திருமதி.சபீனாபேகம்

வா.சா.2 – திரு.ராஜாஉசேன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| ஆவண எண் | தேதி | விவரம் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | **22.09.1999** | சபீனாபேகம் தாயார் சாராபீவி முருகவேலிடம் தாவா சொத்தை கிரையம் பெற்ற கிரையப்பத்திர அசல், |
| வா.சா.ஆ.2 | 22.11.1999 | தாயார் சாராபீவி பெயரில் ஏற்பட்ட பட்டாமாறுதல் உத்தரவு அசல் |
| வா.சா.ஆ.3 | 30.03.2012 | தாயார் சாராபீவி சபீனாபேகத்திற்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் |
| வா.சா.ஆ.4 | --- | தாவா சொத்திற்குரிய வில்லங்கச் சான்றிதழ் அசல் |

**<u>சாட்சி தரப்பு சான்றாவணங்கள்</u> :–**

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | -- | ராஜாஉசேன் பெயரில் உள்ள பட்டா எண்.439 பட்டா அசல் |
| சா.சா.ஆ.2 | -- | ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u> :– இல்லை**

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :– இல்லை**

ARUNSANKAR S

Digitally signed by ARUNSANKAR S
Date: 2024.12.03 18:48:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
முதுகுளத்தூர்.